# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1645/3 - 2010 මාර්තු 15 වැනි සඳුදා - 2010.03.15

1645/3 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### மத்திய மாகாண மாகாண சபை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 13 ஆம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் 154 ஈ (5) ஆம் பிரிவின் கீழ் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம், கௌரவ சரத் ஏக்கநாயக்க அவர்கள் தற்போது வகிக்கும் மத்திய மாகாண சபையின் பிரதான அமைச்சரும், மத்திய மாகாண நிதியும் திட்டமிடலும் சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சியும் மாகாண நிர்வாகமும், மனிதவலு, கல்வியும் கலாசாரமும், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகமும் வாணிபமும், உணவு விநியோகமும் பகிர்ந்தளித்தலும், முதலீட்டு தொடர்பிணைப்பு ஏனைய அமைச்சுக்களுக்கு உட்படாத விடயங்கள் அடங்கலாக மேற்படி அனைத்து விடயங்களுக்கும் பொறுப்புடைய அமைச்சர் எனும் பதவிக்கு மேலதிகமாக, 2010, மாச்சு 5 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கீழ்வரும் அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சராகவும் நியமனஞ் செய்துள்ளேன் என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்:-

* மத்திய மாகாண சுகாதாரம், சுதேசிய வைத்தியம், சமூக நலன்களும் நன்னடத்தைகளும் சிறுவர் பாதுகாப்புச் சேவை ஆகிய விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகவும்,

* மத்திய மாகாண விவசாயம் சிறு நீர்ப்பாசனம், விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, மீன்பிடி, சுற்றாடல் ஆகிய விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகவும்,

* மத்திய மாகாண கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகாரம், கிராமிய அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி, இந்து கலாசாரம், கல்வி (தமிழ்), இளைஞர் விவகார அமைச்சராகவும்,

டிக்கிரி பண்டார கொப்பேகடுவ,<br>
மத்திய மாகாண ஆளுநர்.

4- 33